ஶ்ரீ:

ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

ஶ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

திருமங்கையாழ்வார் அருளிச்செய்த பெரிய திருமொழி

# 7.5 – தந்தை காலில்

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஶ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness  śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# 7.5 – தந்தை காலில்

‡ தந்தை காலில் பெரு விலங்கு ⋆
தாள் அவிழ ⋆
நள் இருட்கண் வந்த எந்தை பெருமானார் ⋆
மருவி நின்ற ஊர் போலும் ⋆
முந்தி வானம் மழை பொழியும் ⋆
மூவா உருவில் மறையாளர் ⋆
அந்தி மூன்றும் அனல் ஓம்பும் ⋆
அணி ஆர் வீதி அழுந்தூரே ‖ **7.5.1** ‖

பாரித்தெழுந்த ⋆
படை மன்னர் தம்மை மாள ⋆
பாரதத்துத் தேரில் பாகனாய் ஊர்ந்த ⋆
தேவ தேவன் ஊர் போலும் ⋆
நீரில் பணைத்த நெடு வாளைக்கு ⋆
அஞ்சிப் போன குருகினங்கள் ⋆
ஆரல் கவுளோடருகணையும் ⋆
அணி ஆர் வயல் சூழ் அழுந்தூரே ‖ **7.5.2** ‖

செம் பொன் மதிள் சூழ் தென் இலங்கைக்கிறைவன் ⋆
சிரங்கள் ஐ இரண்டும் ⋆
உம்பர் வாளிக்கிலக்காக ⋆
உதிர்த்த உரவோன் ஊர் போலும் ⋆
கொம்பில் ஆர்ந்த மாதவி மேல் ⋆

கோதி மேய்ந்த வண்டினங்கள் ⋆
அம்பராவும் கண் மடவார் ⋆
ஐம்பால் அணையும் அழுந்தூரே ॥ **7.5.3** ॥

வெள்ளத்துள் ஓர் ஆல் இலை மேல் மேவி ⋆
அடியேன் மனம் புகுந்து ⋆
என் உள்ளத்துள்ளும் கண் உள்ளும் ⋆
நின்றார் நின்ற ஊர் போலும் ⋆
புள்ளுப் பிள்ளைக்கிரை தேடிப் ⋆
போன காதல் பெடையோடும் ⋆
அள்ளல் செறுவில் கயல் நாடும் ⋆
அணி ஆர் வயல் சூழ் அழுந்தூரே ॥ **7.5.4** ॥

பகலும் இரவும் தானே ஆய்ப் ⋆
பாரும் விண்ணும் தானே ஆய் ⋆
நிகரில் சுடர் ஆய் இருள் ஆகி ⋆
நின்றார் நின்ற ஊர் போலும் ⋆
துகிலின் கொடியும் தேர்த் துகளும் ⋆
துன்னி மாதர் கூந்தல் வாய் ⋆
அகிலின் புகையால் முகில் ஏய்க்கும் ⋆
அணி ஆர் வீதி அழுந்தூரே ॥ **7.5.5** ॥

ஏடிலங்கு தாமரை போல் ⋆
செவ்வாய் முறுவல் செய்தருளி ⋆
மாடு வந்தென் மனம் புகுந்து ⋆
நின்றார் நின்ற ஊர் போலும் ⋆
நீடு மாடத் தனிச் சூலம் போழக் ⋆
கொண்டல் துளி தூவ ⋆

ஆடல் அரவத்தார்ப்போவா ⋆
அணி ஆர் வீதி அழுந்தூரே ॥ **7.5.6** ॥

மாலைப் புகுந்து மலர் அணை மேல் வைகி ⋆
அடியேன் மனம் புகுந்து ⋆
என் நீலக் கண்கள் பனி மல்க ⋆
நின்றார் நின்ற ஊர் போலும் ⋆
வேலைக் கடல் போல் நெடு வீதி ⋆
விண் தோய் சுதை வெண் மணி மாடத்து ⋆
ஆலைப் புகையால் அழற் கதிரை மறைக்கும் ⋆
வீதி அழுந்தூரே ॥ **7.5.7** ॥

வஞ்சி மருங்குல் இடை நோவ ⋆
மணந்து நின்ற கனவகத்து ⋆
என் நெஞ்சு நிறையக் கை கூப்பி ⋆
நின்றார் நின்ற ஊர் போலும் ⋆
பஞ்சி அன்ன மெல் அடி ⋆
நற்பாவை மார்கள் ⋆
ஆடகத்தின் அம் சிலம்பின் ஆர்ப்போவா ⋆
அணி ஆர் வீதி அழுந்தூரே ॥ **7.5.8** ॥

என் ஐம் புலனும் எழிலும் கொண்டு ⋆
இங்கே நெருநல் எழுந்தருளி ⋆
பொன்னம் கலைகள் மெலிவெய்தப் ⋆
போன புனிதர் ஊர் போலும் ⋆
மன்னு முது நீர் அரவிந்த மலர் மேல் ⋆
வரி வண்டிசை பாட ⋆

அன்னம் பெடையோடுடன் ஆடும் ⋆
அணி ஆர் வயல் சூழ் அழுந்தூரே ‖ **7.5.9** ‖

‡ நெல்லில் குவளை கண் காட்ட ⋆
நீரில் குமுதம் வாய் காட்ட ⋆
அல்லிக் கமலம் முகம் காட்டும் ⋆
கழனி அழுந்தூர் நின்றானை ⋆
வல்லிப் பொதும்பில் குயில் கூவும் ⋆
மங்கை வேந்தன் பரகாலன் ⋆
சொல்லில் பொலிந்த தமிழ் மாலை ⋆
சொல்லப் பாவம் நில்லாவே ‖ **7.5.10** ‖

அடிவரவு — தந்தை பாரித்து செம்பொன் வெள்ளத்துள் பகல் ஏடு மாலை
வஞ்சி என்னைம்புலனும் நெல்லில் சிங்கம்

தந்தை காலில் முற்றிற்று

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்